தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹5/- மலர் 13 இதழ் 1 மே 2011

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

தமிழ்நாடு, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் முதன்மை மாநிலமாகத் திகழ்வதால், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில், தொழிற்திறன் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருகிறது. தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப, முறையான பயிற்சி அளிப்பதன் மூலம் வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன், சமுதாயமும், இளைஞர்களும் பயனடையலாம்.

இதனைக் கருத்தில் கொண்டு வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடிய வகையில் தொழிற்பயிற்சித் திட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் மகளிர் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 18 முதல் 35 வயதுடைய ஆண் பெண்களுக்கு, பிரசித்திப்பெற்ற தொழில் நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களின் மூலம் நான்கு சக்கர வாகனங்கள் இயக்குதல், கைபேசி உதிரி பாகங்கள் ஒன்று சேர்த்தல், சில்லரை வர்த்தகத் துறை பயிற்சி, கொத்தனார் பயிற்சி, குழாய் பொருத்தும் பயிற்சி, செவிலியர் பயிற்சி, கட்டிடத் தச்சுப் பணி, மின்சாதனம் பழுது பார்த்தல், ஜே.சி.பி. இயக்குதல், சி.என்.சி. லேத் பயிற்சி, பொக்லைன் இயக்குதல், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பழுது பார்த்தல், டர்னர் பயிற்சி, கம்பி கட்டும் பயிற்சி, பிட்டர் பயிற்சி, ஆயத்த ஆடை தயாரித்தல், நில அளவைப் பயிற்சி, கணினிப் பயிற்சி, சமையல் கலை, கிரேன் இயக்குதல் போன்ற தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சிக்குப் பின்னர் இளைஞர்களை ஒன்று திரட்டி பல பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களை அழைத்து நேரடித் தேர்வின் மூலம் வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. இதற்கு ஏதுவாக அனைத்து மாவட்டங்களிலும் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இம்முகாமில் கலந்து கொள்ளும் இளைஞர்கள். அவரவர் தகுதிக்கும், விருப்பத்திற்கும்ஏற்பநிறுவனங்களைத்தேர்ந்தெடுத்து,விண்ணப்பங்களை அளிக்கின்றனர். வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் தகுதியுடைய நபர்களை எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பிற்கான ஆணையை வழங்குகின்றனர்.

எனவே இளைஞர்கள் தங்களின் தகுதிக்கு ஏற்ற தொழிற்பயிற்சியினையும், வேலைவாய்ப்பினையும் பெற்று தங்களின் வாழ்வின் முன்னேற்றம் அடைய வாழ்த்துகிறேன்.

மேலாண்மை இயக்குநர்

"வாழ்ந்து காட்டுவோம்
மற்றும் மகளிர் திட்டங்கள்,
முதன் முறையாக வேலை
தரும் நிறுவனங்களுக்கும்,
இளைஞர்களுக்கும்
இடையே ஒரு பாலமாக
செயல்பட்டு வருகின்றன.
இந்த அணுகுமுறை இந்தியா
விலேயே தமிழ்நாட்டில்தான்
முதன் முறையாக
செயல்படுத்தப்படுகிறது என்பது
குறிப்பிடத்தக்கது."

கழதங்கள் – 3

கல்விச் சிறப்பிதழாக வெளிவந்துள்ள 2011 ஏப்ரல் மாத முற்றம் இதழ் எங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருந்தது.

உடல் நலம் – 24

மாம்பழம், பப்பாளி போன்றவைகளில் உள்ள உயிர்ச்சத்து, உடல் ஆரோக்கியம், நரம்பு வளர்ச்சி, நல்ல கண்பார்வை, பளபளப்பான தோல் போன்றவை கிடைக்க உதவியாக உள்ளது.

வாழ்ந்து காட்டுவோம் – 27

அன்று எங்களது பணியினை பார்த்து கேலியும் கிண்டலும் செய்த எங்கள் பகுதி மக்கள் இன்று மரக் கன்றுகளின் வளர்ச்சியைக் கண்டு வியப்புடன் பெருமையாகப் பேசுகிறார்கள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்

மலர் 13 இதழ் 01 மே 2011 விலை ரூ. 5/-

கௌரவ ஆசிரியர்
டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

ஆசிரியர்
திரு. எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
திருமதி. எப். இன்னசென்ட் திவ்யா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
திருமதி. ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. மாலதி ஹெலன்
தகவல் தொடர்பு வல்லுநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பொறுப்பாசிரியர்
திருமதி. அ. அமுதா
மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு)

அனுப்புகை உதவியாளர் - முற்றம்
திரு. ஏ. கண்ணன்

கணக்கர்
திருமதி. சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
திரு. மு. செல்வம்

பிழை திருத்துபவர்
திரு. எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தபால் பெட்டி எண். 3226
100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை - 600 032.
தொலைபேசி: 044-4202 7635
தொலைநகல்: 044-4202 7635,
044-2235 2751

www.tamilnaduwomen.org/mutram
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

வெப்பத்தைத் தணிப்போம்!

அன்புள்ள வாசகர்களுக்கு,

பள்ளி மற்றும் கல்லூரி தேர்வுகளை முடித்து விட்டு தேர்வின் முடிவுகளை மாணவர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கோடை விடுமுறையை எவ்வாறு கழிக்கப் போகிறோம் என்று சிறுவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

பூமி வெப்பம் அடைந்து வருவதால் கோடை காலத்தின் வெப்பம் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த ஆண்டும் மிக அதிகமான வெப்பத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறோம்.

வெப்ப காலங்களில் அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டாலும் மிக அதிகமாகவும், உடனடியாகவும் பாதிக்கப்படுபவர்கள் குழந்தைகளும், வயதானவர்களும்தான். எனவே குழந்தைகள் மற்றும் வயதானவர்களை பிரச்சனைகளிலிருந்தும், நோய்களில் இருந்தும் பாதுகாக்க வேண்டியது மிக முக்கியமான கடமையாகும்.

கோடையின், வெப்பம் தாங்க முடியாமல் இப்பொழுது நாம் அனைவரும் குளிர் சாதனங்களை அதிகமாகப் பயன்படுத்த தொடங்கியுள்ளோம். ஆனால் அதற்கு மாறாக இயற்கையான முறையில் வெப்பத்தை தணிப்பதற்கான பல்வேறு வழி முறைகளைப் பின்பற்றினால் அது தனி மனித சுதந்திரத்திற்கும் சுற்றுப்புற சூழல் பாதிக்கப்படாமலிருப்பதற்கும் ஏதுவாக இருக்கும்.

பருவகால மாற்றத்தால், இப்போதெல்லாம் வெப்பம் நீண்ட நாட்களுக்கு நீடிக்கிறது. மழை பெய்யும் நாட்கள் குறைந்து விட்டன. குறுகிய நாட்களில் அதிகமான மழை பெய்து, அந்த மழை நீர் சேர்த்து வைக்கப்படாமல் வீணாக கடலில் கலந்து விடுகிறது.

இதனால் கோடைக் காலங்களில் பல பகுதிகளில் குடிநீர் கிடைக்கப்படாமல் மக்கள் அவதிக்குள்ளாக நேரிடுகிறது. எனவே மழை நீரை சேமிக்கும் பழக்கத்தை நாம் அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே இயற்கையான முறையில் உடலையும், சுற்றுப்புறத்தையும் குளிர்ச்சியாக வைத்துக் கொள்ளவும், மழை நீரை சேமித்து வைக்கவும் இந்தக் கோடையில் கற்றுக் கொள்வோம்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
முற்றம் ஆசிரியர்

கடிதங்கள்

மிக்க மகிழ்ச்சி!

கல்விச் சிறப்பிதழாக வெளிவந்துள்ள 2011 ஏப்ரல் மாத முற்றம் இதழ் எங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருந்தது. எங்களின் பிள்ளைகளின் மேற்படிப்பிற்குத் தேவையான படிப்புகள் குறித்த கட்டுரைகளும் கல்விக் கூடங்கள் குறித்த விபரங்களும் மிகவும் அருமை. இதுபோன்ற பயனுள்ள கட்டுரைகளை தொடர்ந்து முற்றம் இதழில் வெளியிட வேண்டுகிறேன்.

வாழ்த்துக்களுடன்,
திருமதி. மீனாட்சி இராமச்சந்திரன்,
சிகப்பு நிலா மகளிர் சுய உதவிக் குழு,
சோளிங்கர், வேலூர் மாவட்டம்.

வாழ்க வளமுடன்!

மாதந்தோறும் பயனுள்ள பல செய்திகளைத் தாங்கி வரும் முற்றத்திற்கு எங்கள் குழுவின் சார்பில் வாழ்த்துக்கள். அறியாமையில் மூழ்கிக் கிடந்த பெண்கள் சுய உதவிக் குழுக்களில் இணைந்து, வாழ்வில் முன்னேற்றம் பெற்று வரும் வெற்றிக் கதைகளையும், வரலாற்று கால மகளிர் குறித்த செய்திகளையும் சுவைபட வெளியிட்டு வரும் முற்றமே நீ வாழ்க வளமுடன். வளர்க நலமுடன் என்று வாழ்த்துகிறோம்

அன்புடன்,
திருமதி. சித்ரா ராமதாஸ்,
நட்சத்திரம் மகளிர் சுய உதவிக் குழு,
ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

வாழ்ந்து காட்டுவோம்!

கிராம மக்களின் வறுமையை நீக்கிட செயலாற்றி வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வறுமை ஒழிப்புச் சங்கத்தின் முயற்சியால் ஏழை எளிய மக்கள் தங்களின் வாழ்வில் முன்னேற்றம் அடைந்து வரும் செய்திகளை முற்றம் மாத இதழின் வாயிலாக அறிந்து கொள்கிறோம். நாளை நாங்களும் வாழ்வில் வெற்றி பெறுவோம். முற்றத்தில் இடம் பெறுவோம்.

என்றும் அன்புடன்,
திருமதி. புஷ்பா சாமிநாதன்,
கடல் புறா மகளிர் குழு,
தாம்பரம் சானடோரியம், சென்னை.

மகளிர் முன்னேற்றத்திற்கு உறுதுணையாய் இருக்கும் முற்றம் இதழிற்கு சந்தா செலுத்தி உறுப்பினர்களாகி முற்றம் இதழ் மேலும் மேலும் சிறப்பாய் வளர வாழ்த்துங்கள்...!

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

– ஆசிரியர், முற்றம்

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com wdcmutram@gmail.com

கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும்

முகைதீன் மகளிர் சுய உதவிக் குழு

இக்குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்கள் அழகாகவும், விலை குறைவாகவும், தரமாகவும் இருப்பதால் மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. பல்வேறு இடங்களில் நடைபெறும் கண்காட்சிகளிலும் அரங்குகள் அமைத்து தங்களின் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேஸ்வரம் அலைகடல் ஓரத்தில் அமைந்துள்ள நகரமாகும். இங்கு கடல் வளம் உள்ளதால் மக்களின் வாழ்வாதாரம் கடலைச் சார்ந்தே அமைந்ததுள்ளது. இந்நகரில் சிறப்பாக செயல்பட்டு வருவது முகைதீன் மகளிர் சுய உதவிக் குழு. ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மகளிர் ஒன்றிணைந்து இக்குழுவினைத் துவக்கினர். குழுவின் பெயரில் வங்கியில் சேமிப்புக் கணக்குத் துவக்கி, தங்களுக்கு கிடைக்கும் சிறு தொகையையும் ஊக்கத்துடன் சேமித்து வந்தனர்.

குழுவை சிறப்பாக நடத்துவதற்கு நிர்வாகப் பயிற்சி, பொருளாதார முன்னேற்றம் பெற உதவிடும் வகையில் தொழிற்பயிற்சி போன்றவைகள் மகளிர் திட்டம் மூலம் இக்குழுவின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. இப்பயிற்சிகளில் ஊக்கத்துடன் பங்கு கொண்ட முகைதீன் மகளிர் சுய உதவிக் குழுவினர் தங்களின் முன்னேற்றத்திற்கு வழி ஏற்படுத்திக் கொண்டனர்.

குழுவை சிறப்பாக நடத்துவதற்கு நிர்வாகப் பயிற்சி, பொருளாதார முன்னேற்றம் பெற உதவிடும் வகையில் தொழிற்பயிற்சி போன்றவைகள் மகளிர் திட்டம் மூலம் இக்குழுவின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. இப்பயிற்சிகளில் ஊக்கத்துடன் பங்கு கொண்ட முகைதீன் மகளிர் சுய உதவிக் குழுவினர் தங்களின் முன்னேற்றத்திற்கு வழி ஏற்படுத்திக் கொண்டனர்.

இன்று தங்கள் பகுதியில் கிடைக்கும் கடல் பொருளான சங்கில் கைவண்ணம் மிக்க அழகிய பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றனர். இக்குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்கள் அழகாகவும், விலை குறைவாகவும், தரமாகவும் இருப்பதால் மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

பல்வேறு இடங்களில் நடைபெறும் கண்காட்சிகளிலும் அரங்குகள் அமைத்து தங்களின் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். மேலும் வெளி மாநிலங்களில் நடைபெறும் கண்காட்சிகளிலும் பங்கு கொண்டு வருகின்றனர்,

தற்போது இக்குழுவினர் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைந்து வருவதுடன் தங்கள் பகுதியில் செயல்படும் மற்றக் குழுக்களைச் சேர்ந்த மகளிருக்கும் கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்வது குறித்த பயிற்சியை அளித்து வருகின்றனர்.

தாங்கள் வசிக்கும் பகுதிக்கு தேவையான அடிப்படை வசதிகளான தெரு விளக்கு, கழிப்பிடம், சாலை மற்றும் குடிநீர் வசதிகளைப் பெற்றுத் தந்துள்ளனர். பெண்கள், குழந்தைகள், முதியோர், ஆதரவற்றோர், மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றனர். ■

மனங்கவரும் அழகிய சணல் பைகள் உற்பத்தி செய்யும்

காமதேனு மகளிர் சுய உதவிக் குழு

குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து, பரிசுப் பொருட்கள், புடவை மற்றும் பெண்களுக்குத் தேவையான ஆடை வகைகள், மளிகைச் சாமான்கள், பினாயில், சோப் ஆயில் போன்றவற்றை விற்பனை செய்து வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டம் என்றவுடன் நமக்கு நினைவிற்கு வரும் பல சிறப்புகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் சிறப்பான செயல்பாடுகளும் ஒன்றாகும். இம்மாவட்டத்தில் செயல்படும் காமதேனு மகளிர் சுய உதவிக் குழு தனது சிறப்பான செயல்பாட்டினால் பாராட்டுகள் பலவற்றைப் பெற்று வருகிறது.

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பெண்களால் துவக்கப்பட்ட இக்குழு இன்று பொருளாதார முன்னேற்றம் பெற்று சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது. நிர்வாகப் பயிற்சிகளும், தொழிற் பயிற்சிகளும் பெற்ற இக்குழுவின் உறுப்பினர்கள் தாங்கள் பெற்ற பயிற்சியினைக் கொண்டு, வங்கிக் கடன் பெற்று மூலப்பொருட்களை வாங்கி மண் பொம்மைகள், சணல் பைகள் போன்ற பல்வேறு பொருட்களை கலைநயத்துடன் உற்பத்தி செய்து, பல்வேறு இடங்களில் நடைபெறும் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்கின்றனர்.

இவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் தரமாகவும், அழகாகவும், விலை குறைவாகவும் உள்ளதால் ஏராளமானவர்கள் விரும்பி வாங்குகின்றனர். தங்கள் பகுதியில் செயல்பட்டு வரும் மற்ற சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் பயிற்சிகள் அளித்து வருகின்றனர். இதன் மூலம் ஏராளமான பெண்கள் பயனடைந்து வருகின்றனர்.

பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்து வரும் இக்குழுவினர் சமூக மேம்பாட்டிற்கும் உதவிகள் பல புரிந்து வருகின்றனர். பள்ளிக் குழந்தைகளுக்கு உதவுவது, சுற்றுப்புற சுகாதாரத்தை காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது, முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு தேவையான உதவிகளைச் செய்வது என இக்குழுவினர் மேற்கொண்டு வரும் சமூகச் சேவைகளும் ஏராளம்.

ஊக்கத்துடன் கூடிய உழைப்பு, ஆக்கத்துடன் சேர்ந்த சேவை என செயல்பாட்டு வரும் திருவண்ணாமலை மாவட்டம் காமதேனு மகளிர் சுய உதவிக் குழு பல்வேறு தரப்பினரின் பாராட்டுதல்களையும் பெற்று நாளும் வளர்ந்து வருகிறது. ■

பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்து வரும் இக்குழுவினர் சமூக நல மேம்பாட்டிற்கும் உதவிகள் பல புரிந்து வருகின்றனர். பள்ளிக் குழந்தைகளுக்கு உதவுவது, சுற்றுப்புற சுகாதாரத்தை காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது, முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு தேவையான உதவிகளைச் செய்வது என இக்குழுவினர் மேற்கொண்டு வரும் சமூகச் சேவைகளும் ஏராளம்.

இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சிகள்...!

தமிழ்நாடு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் முதன்மை மாநிலமாகத் திகழ்வதால், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில், தொழில்திறன் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருகிறது.

தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப, முறையான தொழிற்பயிற்சிகள் அளிப்பதன் மூலம் வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன், சமுதாயமும், இளைஞர்களும் பெருமளவில் பயனடைகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சிறந்த நிறுவனங்களான எம்.ஆர்.எப்., நோக்கியா, செயிண்ட் கோபெயின் போன்ற நிறுவனங்களின் உதவியுடன் இளைஞர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகளை அளித்து வருகிறது.

வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடிய வகையில் தொழிற்பயிற்சித் திட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் மகளிர் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டங்களின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வி அறிவு பெற்ற இளைஞர்களுக்கு தக்க பயிற்சிகள் அளித்து வேலைவாய்ப்புகள் வழங்குவதன் மூலம் அவர்களுக்கு வளமான எதிர்காலம் அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

குறிக்கோள்கள்

குறிப்பிட்ட துறையில் திறன்களைப் பெற்றிட இளைஞர்களை தயார் செய்தல் மற்றும் அமைப்புச் சார்ந்த பிரிவுகளில் வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துதல். வளர்ந்து வரும் பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்ப திறன் வாய்ந்த வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துதல் போன்றவற்றை குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நுண்திறன்

தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் ஏற்ற பயிற்சி நிறுவனங்களுக்கு சந்தை வாய்ப்பு அடிப்படையில் பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். அரசு முகமைகள், பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற் கூடங்கள் வாயிலாகப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சி நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்கு வேலை உத்திரவாதம் அளிக்கும்.

பயிற்சிக்கான தகுதிகள்

18 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட ஆண் மற்றும் பெண் இளையோர்கள் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். சுய உதவிக் குழுக்களில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். குறிப்பிட்ட

தொழிற்திறன் பயிற்சிகளை வழங்கி, ஏற்ற நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படுவதுடன், சுய தொழில் தொடங்க வங்கிக் கடனும் பெற்றுத் தரப்படுகிறது.

வேலைவாய்ப்புகள் அதிகம் உள்ள தொழில்களில் அளிக்கப்படும் பயிற்சிகளின் விளைவாக தொழிற் பயிற்சியை நிறைவு செய்தவுடன் வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றது என்பதால் இளைஞர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இப்பயிற்சிகளில் பங்கு கொள்கின்றனர்.

பயிற்சிக்கான கல்வித் தகுதியினை மாவட்ட மகளிர் திட்ட அலுவலர்கள், பயிற்சி நிறுவனத்தினர் தீர்மானம் செய்வர். பயிற்சிக்கான கால அளவு சுமார் மூன்று மாத காலங்கள் ஆகும்.

பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல்

மகளிர் திட்டத்தின் திட்ட அலுவலர்களின் கீழ் செயல்படும் மாவட்ட அளவிலான குழுமம் பயிற்சிக்கான பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும். இதில் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் (பயிற்சி) மற்றும் வாழ்ந்து காட்டுவோம் செயல்படும் மாவட்டங்களில் உள்ள உதவித் திட்ட மேலாளர்கள் உறுப்பினர்களாக இருப்பர்.

இளைஞர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளின் விபரங்களை திட்ட அலுவலர், மகளிர் திட்டம் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பெயரில் செய்தித்தாள்கள் மூலம் அறிவிப்பார். பயிற்சி நிறுவனங்கள் கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்தி வட்டார அளவில் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும்.

ஊக்கத் தொகை

பயிற்சி பெறும் பயனாளிகளுக்கு பயிற்சியின் தன்மை மற்றும் கால அளவைப் பொறுத்து ஊக்கத் தொகை, பயணப்படி மற்றும் சீருடை போன்றவை வழங்கப்படும்

பிரசித்திப் பெற்ற நிறுவனங்களின் வாயிலாக தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு, அந்நிறுவனங்களிலேயே வேலைவாய்ப்பும் பெற்றுத் தரப்படுகிறது. இதன் மூலமாக சிறந்த தொழில் வாய்ப்புகளை இளைஞர்கள் பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாளுக்கு நாள் வளர்ந்து வரும் இலகு மற்றும் கனரக வாகன ஓட்டுநர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு கிராமப்புறங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுகிறது.

ஊக்கத் தொகை

பயிற்சி பெறும் பயனாளிகளுக்கு பயிற்சியின் தன்மை மற்றும் கால அளவைப் பொறுத்து ஊக்கத் தொகை, பயணப்படி மற்றும் சீருடை போன்றவை வழங்கப்படும்.

தொழிற்பயிற்சிகள்

பிரபல தொழிற்பயிற்சி நிறுவனங்களின் மூலம் தேவையான பயிற்சிகள் அளித்து வேலை வாய்ப்பு அளித்தல்.

இத்திட்டத்தின் மூலம்

நான்கு சக்கர வாகனங்கள் (இலகு போர்க் லிப்ட் இயக்கும் பயிற்சி, கனரகம்) ஓட்டுநர் பயிற்சி ஜே. சி. பி. இயக்குதல், சி. என். சி. லேத் பயிற்சி, பொக்லைன் இயக்குதல், கிரேன் இயக்குதல், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பழுது பார்த்தல், கணினிப் பயிற்சி, கைப்பேசி உதிரி பாகங்கள் ஒன்று சேர்த்தல், மின் சாதனம் பழுது பார்த்தல், சில்லறை வர்த்தகத் துறை பயிற்சி, செவிலியர் பயிற்சி, பிட்டர் பயிற்சி, ஆயத்த ஆடை தயாரித்தல், நில அளவைப் பயிற்சி, சமையல் கலை, விமானப் பணிப்பெண் பயிற்சி ஆகிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஆண்டுக்கு சுமார் 25 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கத் தக்க வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கணிப்பொறித் தொடர்பான பயிற்சிகள் பெறுபவர்கள் சுய தொழில் மேற்கொள்வதற்கு ஏதுவாக வங்கிக் கடன் பெற்றுத் தரப்படுகிறது. இதன் மூலம் தொழில் முனைவோர்களாக ஏராளமானவர்கள் உருவாகி வருகின்றனர்.



வளர்ந்து வரும் கட்டுமானத் துறைக்கு தேவைப்படும் பணியாளர்களை உருவாக்க புகழ்பெற்ற கட்டுமான நிறுவனங்கள் வாயிலாக தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது.

வேலை வாய்ப்பு முகாம்கள்

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம்கள் மாவட்ட அளவில் நடத்தப்படுகிறது. வேலை வாய்ப்பு முகாம் குறித்தத் தகவல்கள் ஆட்டோ விளம்பரம், துண்டுப் பிரசுரம், தொலைக்காட்சி, செய்தித்தாள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கக் கூட்டங்கள் வாயிலாக அனைத்து கிராமப்புற இளைஞர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

முகாமில் கலந்து கொள்ளும் இளைஞர்கள், அவரவர் தகுதிக்கும், விருப்பத்திற்கும் ஏற்ற நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து, விண்ணப்பங்களை அளிக்கின்றனர். நிறுவனப் பிரதிநிதிகள், தகுதியுடைய நபர்களை எழுத்துத் தேர்வு மற்றும் நேர்க்காணல் மூலம் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பிற்கான ஆணையை வழங்குகின்றனர்.

வேலை வாய்ப்பு முகாமில், நோக்கியா மற்றும் மோட்டோரோலா கைப்பேசி நிறுவனங்கள், டி.வி.எஸ்., எம்.ஆர்.எப்., இந்தியா பிஸ்டன்ஸ், ரிலையன்ஸ், ஃபாக்ஸ்கான், எல். அண்ட் டி., சி.சி.சி. லிமிடெட்., ஈ.டி.எ. அஸ்கான், ராணே ஸ்டியரிங், ராணே வால்வ்ஸ், வோலாக்ஸ், எம்.எம். போர்ஜிங், ஐ.எல். அண்ட் எப்.எஸ்., டி.டி.கே., போன்ற நிறுவனங்கள் கலந்து கொண்டு தகுதியுள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, தங்களது நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தியுள்ளன.

தொழிற்பயிற்சி பெற்றவர்கள் தங்களுக்கு ஏற்ற தொழில் வாய்ப்புகளை பெறுகின்றனர். இதற்கு ஏதுவாக மகளிர் திட்டத்தின் வாயிலாக உரிய சான்றிதழ்கள் பெற்றுத் தரப்படுகிறது

வேலை தரும் நிறுவனங்களுக்கும், வேலை தேடும் இளைஞர்களுக்கும் இடையே மகளிர் திட்டம் ஒரு பாலமாக செயல்பட்டு வருகிறது. இந்த அணுகுமுறை இந்தியாவி லேயே தமிழ்நாட்டில்தான் முதன் முறையாக செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

ஓட்டுநர் பயிற்சி

நாளுக்கு நாள் வளர்ந்து வரும் இலகு மற்றும் கனரக வாகன ஓட்டுநர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு கிராமப்புறங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி வழங்கப்பட்டு, அவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது. இவர்கள் நிலையான மாத வருமானம் ஈட்டுவதால் இவர்களது குடும்பங்கள் வறுமையில் இருந்து மீண்டுள்ளன.

கைப்பேசி நிறுவனங்களில் பயிற்சி

நோக்கியோ மற்றும் மோட்டோரோலா கைப்பேசி நிறுவனங்களில் தகுதியுள்ள இளைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு, குறைந்தபட்சம் மாதம் ரூபாய் 4500/– மாத ஊதியத்தில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்களும், அவர்களின் குடும்பத்தினரும் தங்கள் வாழ்க்கையில் கிடைத்த மிக அரிய வாய்ப்பாகக் கருதுகின்றனர்.

கட்டுமான நிறுவனங்களில் பயிற்சி

துபாயினைச் சேர்ந்த ஈ.டி.ஏ. அஸ்கான் நிறுவனம், சென்னையில் உள்ள எல். அண்ட் டி., மற்றும் சி.சி.சி. லிமிடெட் போன்ற கட்டிடத் தொழில் நிறுவனங்கள் மூலம் ஆண்களுக்கு

மருத்துவத் துறையில் அத்தியாவசியப் பணியான செவிலியர் மற்றும் உதவியாளர் பணிகளுக்காக ஏராளமான பெண்களுக்கு பயிற்சி தரப்பட்டு, ஏற்ற வேலைவாய்ப்புகளும் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

ஆயத்த ஆடைகள் தயாரித்தல் குறித்த பயிற்சிகள் பெண்களுக்கு வழங்கப்பட்டு வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்படுகிறது. இதன் மூலம், மாதம் ரூபாய் 3000/– வரை இவர்கள் ஊதியம் பெறுகின்றனர்.

கொத்தனார், கம்பி கட்டுதல், தச்சுப் பணி, மின் சாதனப் பயிற்சி, குளிர்சாதனங்கள் பராமரிப்பு குறித்த பயிற்சி, குழாய் பொருத்தும் பயிற்சி மற்றும் நில அளவை போன்றத் தொழில்களில் மூன்று மாதங்களுக்குப் பயிற்சிகள் அளித்து, அந்தந்த நிறுவனங்களிலேயே வேலை வாய்ப்புக்கும் ஏற்பாடு செய்து தரப்படுவதுடன், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புக்கு ஏற்பாடுகள் செய்து தரப்படுகின்றன.

ஆயத்த ஆடைகள் தயாரித்தல்

இளைஞர்களுக்கு ஆயத்த ஆடை தயாரித்தல் பயிற்சி ஏ.டி.டி.சி., சிட்ரா போன்ற நிறுவனங்கள் மூலம் ஒரு மாதத்திற்கு அளிக்கப்பட்டு, மாத ஊதியமாக ரூ. 3000/– முதல் ரூ. 4000/– வரை பெறும் வகையில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படுகிறது. இதன் மூலம் ஏராளமானவர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

வேலை தரும் நிறுவனங்களுக்கும், வேலை தேடும் இளைஞர்களுக்கும் இடையே மகளிர் திட்டம் ஒரு பாலமாக செயல்பட்டு வருகிறது. இந்த அணுகுமுறை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முறையாக செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம்கள் மாவட்ட அளவில் நடத்தப்படுகிறது. வேலை வாய்ப்பு முகாம் குறித்தத் தகவல்கள் ஆட்டோ விளம்பரம், துண்டுப் பிரசுரம், தொலைக்காட்சி, செய்தித்தாள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கக் கூட்டங்கள் வாயிலாக அனைத்து கிராமப்புற இளைஞர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

குழுவாக இணைந்தோம்...!

வாழ்வில் வெற்றி பெற்றோம்...!!

ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்கள், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் மகளிர் திட்டம் வாயிலாக ரூபாய் ஐந்து இலட்சம் மதிப்புள்ள கட்டிடத்தையும், இயந்திரங்களையும் கொடுத்திருக்கிறார்கள். இதன் மூலம் மேலும் பலர் பயனடைந்து வருகின்றனர்.

கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், எல்.என்.புரம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் எல். என். புரம் – 3 மகளிர் சுய உதவிக்குழுவின் ஊக்குநர் திருமதி. எஸ். விஜயலட்சுமி தங்களது குழுவின் வெற்றிக் கதையை கூறுகிறார். ஏழை மகளிரை உறுப்பினராகக் கொண்டு செயல்பட்டு வரும் எங்கள் குழுவினருக்கு மகளிர் திட்டம் மூலம் தொழில் முனைவோர் பயிற்சியும், காந்தி கிராமப் பல்கலைக் கழகத்தில் 6 நாட்கள் பேக்கரி தொழில் திறன் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

பொருளாதாரக் கடனாகப் பெற்றத் தொகையை மூலதனமாகக் கொண்டு பேக்கரி பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறோம். 10 உறுப்பினர்கள் விற்பனையிலும், 10 உறுப்பினர்கள் உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளோம். இப்போது நாள் ஒன்றிற்கு ஒவ்வொரு உறுப்பினரும் ரூபாய் 150/– ஊதியமாகப் பெற்றுக் கொள்கிறோம்.

நாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் தரமாகவும், விலை குறைவாகவும் இருப்பதால் எங்கள் பொருட்களுக்கு வரவேற்பும், இதன் மூலம் எங்கள் குழுவிற்கு நல்ல பெயரும் கிடைத்துள்ளது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க செயற்குழுக் கூட்டத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் பேக்கரி பொருட்களை அரசு ஆய்வுக் கூட்டங்கள், வங்கியாளர் கூட்டங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் கல்லூரிகளில் செயல்படும் உணவகங்களுக்கு மொத்த விற்பனை ஆணை பெற்றுத் தர முயற்சி மேற்கொள்ளும்படி, DSMS மேலாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற பேக்கரி மற்றும் கன்பெக்ஷன் (Bakery and Confection) கருத்துப் பட்டறையில் எல்.என்.புரம் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 40 பேர் கலந்து கொண்டோம். இதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் குறிப்பிடும்போது, 'மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு பேக்கிங் சிறந்த முறையில் இருப்பதுடன், பொருள் தயாரிக்கப்பட்ட தேதி மற்றும் காலாவதி ஆகும் தேதி போன்றவற்றை குறிப்பிடுவதுடன், பொருட்களை தரமானதாகவும், நேர்த்தியாவும் தயாரிக்க வேண்டும்' என்றார்.

கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் எங்களுடைய பொருட்களை வாங்குகிறார்கள். சந்தைகள், கண்காட்சிகள், கூட்டங்கள் மற்றும் பயிற்சிகள் நடைபெறும் இடங்களில் அரங்குகள் அமைத்து எங்கள் பொருட்களை விற்பனை செய்கிறோம்.

விலங்குகள் கழுத்துப் பட்டிகள் உற்பத்தி செய்யும்

ஆண்டகலூர் கேட் - II மகளிர் சுய உதவிக் குழு

ஆண்டுதோறும் மகளிர் தின விழாவினை சிறப்பாகக் கொண்டாடுதல் மற்றும் சிறுவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல் என சமூக நலப் பணிகளிலும் ஆண்டகலூர் கேட் – 2 மகளிர் சுய உதவிக் குழு ஈடுபட்டு வருகிறது.

ஆண்டகலூர் கேட் – 2 மகளிர் சுய உதவிக் குழு குருக்குபுரம் ஊராட்சி, இராசிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 2005ஆம் ஆண்டு 20 உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. பிள்ளாநல்லூர் கிளை கனரா வங்கிக் கிளையில் கணக்கு துவங்கினர். இந்தக் குழு ஆரம்பிக்கும் போது, சுய உதவிக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் ஆரம்பத்தில் கூலி வேலை செய்து வந்தார்கள்.

டீக் கடை, ஜெராக்ஸ் கடை, சைக்கிள் ஸ்டேண்ட், படுதா போடுதல் மற்றும் மாவுப் பட்டறை போன்ற பல தொழில்களை தனிப்பட்ட முறையில் சிறு தொழிலாக செய்து வந்த உறுப்பினர்களுக்கு, பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டது. ஏற்கனவே தங்களுக்குத் தெரிந்த தொழிலான விலங்குகளுக்கு கழுத்துப் பட்டி அல்லது பட்டை செய்தல் தொழிலை செய்ய முடிவு செய்தனர்.

மகளிர் திட்டம் மற்றும் பிள்ளாநல்லூர் கிளை கனரா வங்கிக் கிளை மூலமாகப் பொருளாதாரக் கடனாக ரூ. மூன்று இலட்சம் பெற்று விலங்கு கழுத்துப் பட்டை செய்யும் தொழிலை செய்து வருகின்றனர். உள்கடன் மூலம் பெற்ற சிறு முதலீட்டுத் தொகையில் தொழில் செய்த போது சராசரியாக மாத வருமானம் ரூபாய் 1000/– முதல் ரூபாய் 1200/– வரை கிடைத்து வந்த இவர்களுக்கு தற்போது விலங்கு கழுத்துப் பட்டை செய்யும் தொழில் மூலம் கிடைக்கும் தொகையில் வங்கிக் கடன் ரூபாய் 1,60,000/– வரை திருப்பிச் செலுத்தியுள்ளனர்.

தற்போது இவர்களுக்கு ரூபாய் 2000/– முதல் ரூபாய் 3000/– வரை நபர் ஒன்றுக்கு சராசரியாக மாத வருமானம் கிடைத்து வருகிறது. தங்கள் பகுதியில் உள்ள சாலையோரங்கள் மற்றும் சாக்கடைக் கால்வாய்களை தூய்மை செய்தல், மாதந்தோறும் கோயில் சுற்றுப் புறங்களை சுத்தப்படுத்துதல், கருணை இல்லத்தைச் சேர்ந்த ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு வழங்குதல், ஆதரவற்ற முதியோர்களுக்கு உதவித் தொகை கிடைக்கச் செய்தல், மாற்றுத் திறனாளி ஒருவருக்கு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் அலுவலகம் மூலம் தையல் இயந்திரம் பெற்றுத் தர முயற்சிகள் மேற்கொள்ளல், ஆண்டுதோறும் மகளிர் தின விழாவினை சிறப்பாகக் கொண்டாடுதல் மற்றும் சிறுவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல் என சமூக நலப் பணிகளிலும் ஆண்டகலூர் கேட் – 2 மகளிர் சுய உதவிக் குழு ஈடுபட்டு வருகிறது.

நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து டிபார்ட்மெண்டல் ஸ்டோர்கள், பல்வேறு விற்பனைக் கண்காட்சிகள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களிலும் இக்குழுவினர் உற்பத்தி செய்யும் விலங்கு கழுத்துப் பட்டிகள் விற்பனையாகி வருகின்றன

2 பெண்கள் உட்பட 33 அமைச்சர்களுடன்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3வது முறையாகத் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்றார்

தமிழ்நாட்டில் சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்ற செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16.05.2011 அன்று தமிழக முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டார். சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா கலையரங்கத்தில் நடைபெற்ற விழாவில், தமிழக ஆளுநர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சருடன் 2 பெண்கள் உட்பட 33 அமைச்சர்கள் பதவி ஏற்றுக் கொண்டனர். தமிழக முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்ட மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்திலுள்ள முதலமைச்சர் அறைக்கு வருகை தந்து தமது பணியைத் தொடங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணை பிறப்பித்து முதல் கையொப்பமிட்ட திட்டங்கள் வருமாறு

படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவியோடு, மாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் இலவசமாக வழங்குதல், இளநிலைப் பட்டம் அல்லது டிப்ளமோ பட்டயம் பெற்ற பெண்களுக்கு திருமண உதவித் தொகையை உயர்த்துவதுடன், மாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் இலவசமாக வழங்குதல், முதியோர், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகையை உயர்த்தி வழங்குதல், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்குதல் மற்றும் அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 35 கிலோ அரிசி இலவசமாக வழங்குதல், மீன் பிடிக்கத் தடை விதிக்கப்படும் காலகட்டத்தில் பாதிக்கப்படும் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தி வழங்குதல், அரசுப் பணி புரியும் தாய்மார்களுக்கு 6 மாத காலம் மகப்பேறு விடுப்பு அளிக்க ஒப்புதல் அளித்தல் ஆகிய ஆணைகளை பிறப்பித்து அதற்குரிய கோப்புகளில் மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கையொப்பமிட்டார்கள்,

தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவும், அதற்கான திட்டங்களை வகுத்து சிறப்புடன் அமல்படுத்தவும், அரசின் சிறப்புத் திட்டங்களை செம்மையோடு விரைந்து செயல்படுத்தவும் புதிய துறை ஒன்றைத் தொடங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டு, அதற்குரிய கோப்பில் கையொப்பமிட்டார்கள். இத்துறை 'சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை' எனும் பெயரில் அழைக்கப்படும். இத்துறைக்கென தனி அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

செல்வி ஜெ ஜெயலலிதா தலைமையிலான
அமைச்சரவை பதவியேற்பு விழா
SWEARING - IN CEREMONY OF
THE COUNCIL OF MINISTERS HEADED BY



புதுக்கோட்டை

குறிஞ்சி மகளிர் குழுவின் 'புதுகை'

புதுக்கோட்டை மாவட்டம், குமாரமங்களத்தில் குறிஞ்சி மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் முன்னேற்றம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் அகர்பத்தி, கம்ப்யூட்டர் சாம்பிராணி மற்றும் ஊறுகாய்களை தயாரித்து விற்பனை செய்யலாம் எனத் தீர்ம ானித்தனர். தொழிலுக்குத் தேவையான பயிற்சிகளை மகளிர் திட்டத்தின் மூலம் பெற்றனர்.

மகளிர் திட்டம் மற்றும் SGSY திட்டத்தின் கீழ் பொருளாதாரக் கடன், வங்கிக் கடன் ஆகியவைகளைப் பெற்று தற்போது ரூபாய் மூன்று இலட்சம் மூலதனத்துடன் தொழிலை ஆரம்பித்துள்ளனர்.

தாங்களின் உற்பத்திப் பொருட்களை அழகான முறையில் கட்டுமானம் (Packing) செய்து 'புதுகை' என்ற பெயரிட்டு விற்பனை செய்கின்றனர். இப்பொருட்களை உள்ளூர் வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதுடன், மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளிலும் அரங்குகள் அமைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

விற்பனை செய்யும் பொருட்களின் தரம் குறித்தும் வாடிக்கையாளர்களிடம் விசாரித்து, வாங்குவோரின் திருப்திக்கு ஏற்ப குறைந்த விலையில் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயில் தாங்கள் பெற்றிருந்த வங்கிக் கடனுக்கு மாத தவணையாக ரூபாய் 2000/– வீதம் திரும்பச் செலுத்தி வருகின்றனர். குழுவில் உள்ள 20 உறுப்பினர்களும் தலா ரூபாய் 2400/– மாத ஊதியமாகப் பெறுகின்றனர்.

இதர மாவட்டங்களில் செயல்படும் சுய உதவிக் குழுவினர், குறிஞ்சி மகளிர் சுய உதவிக் குழுவினர் மேற்கொள்ளும் தொழில் நடவடிக்கைகளைப் பார்வையிட்டு களப்பணி மேற் கொண்டு ஆலோசனைகள் பெற்றுச் செல்கின்றனர்.

மேலும் குறிஞ்சி மகளிர் சுய உதவிக் குழு விராலிமலை வட்டாரத்தில் செயல்படும் பிற சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுதாரணமாக செயல்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருவள்ளூர்

காரம்பாக்கம் கூட்டமைப்பின் சிறப்பான செயல்பாடு

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் வட்டாரத்தில் காரம்பாக்கம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பில் 76 சுய உதவிக் குழுக்கள் உறுப்பினராக இணைந்து செயல்படுகின்றன. உறுப்பினர் குழுக்களின் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்கள் கூட்டமைப்பின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அரக்கோணம் பராஞ்சி கிராமத்தில் 18 ஏக்கர் நிலம் வாங்கி அதில் 1200 சதுர அடி வீதம் 450 பெண்களுக்கு தனித்தனியே பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறப் பகுதிகளில் இயற்கை விவசாயப் பண்ணைகள் செயல்படுத்தப்பட்டு பொருளாதார முன்னேற்றத்திற்கு வங்கிக் கடன் பெற்றுத் தரப் பட்டுள்ளது. LIC நிறுவனத்துடன் இணைந்து அனைத்து உறுப்பினர்களுக்கும் நுண்காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

உணவு விடுதி, தையல் தொழில், மாவு அரைத்தல், அரிசி வியாபாரம் என பல்வேறு தொழில்கள் மூலம் தனி நபரது பொருளாதாரம் வளர்ச்சியடைய கூட்டமைப்பு வழிகாட்டி, தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

ஊராட்சிப் பகுதியில் உள்ள சாலைகளும், கழிவு நீர் கால்வாய்களும் சரி செய்யப்பட்டது. ஊராட்சியில் உள்ள அனைத்து மகளிரும் HIV பரிசோதனை செய்ய வழிகாட்டப்பட்டது. சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வு பேரணி மற்றும் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

நலிவுற்றோர் கணக்கெடுக்கப்பட்டு அவர்களுக்கு வேண்டிய நலத்திட்டங்கள் பெற்றுத் தரப்பட்டுள்ளது. மேற்கண்ட செயல்பாடுகளினால் சுய உதவிக் குழுக்கள் சிறப்பான வளர்ச்சியைப் பெற்று வருகின்றன.

நாகப்பட்டினம்

உயர்ந்த வாழ்க்கைத் தரம்!

நாகை மாவட்டம், ஆரம்பள்ளம் பஞ்சாயத்தில் மணியம்மை மகளிர் சுய உதவிக் குழு 2003ஆம் ஆண்டு முதல் சிறப்பாக இயங்கி வருகிறது. குழுவின் சார்பில் புதுப்பட்டினம் பாரத ஸ்டேட் வங்கியில் சேமிப்புக் கணக்குத் துவங்கி குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் தலா ரூபாய் 50/– வீதம் சேமித்து வந்தனர். பின்னர் வங்கியில் நேரடிக் கடனாக ரூபாய் 25,000/– பெற்று, அதையும் குறித்த காலத்தில் திரும்பச் செலுத்தி விட்டனர்.

மகளிர் திட்டத்தின் மூலம் ரூபாய் 10 ஆயிரம் மானியத்துடன் கூடிய கடன் உதவி பெற்று, கயிறு திரிக்கும் இயந்திரம் ஒன்றினை வாங்கி அதன் மூலம் கயிறு திரித்து சின்னக் கடைகளில் விற்பனை செய்து வருகின்றனர். கயிறு திரித்தல் குறித்து 21 நாட்களுக்கான பயிற்சியினை மகளிர் திட்டம் மூலம் பெற்றனர்.

பயிற்சிக்குப் பின்னர் ரூபாய் ஒரு இலட்சம் மானியத்துடன் கூடிய தொழிற்கடனாக ரூபாய் 3 இலட்சம் பெற்றனர். அத்தொகையைக் கொண்டு கயிறு திரித்தல் தொழிலை மேலும் விரிவுபடுத்தி உள்ளனர். தற்போது மாதந்தோறும் நல்ல வருவாய் பெற்று வருகின்றனர். தாங்கள் பெற்றக் கடனையும் திரும்பச் செலுத்தி வருகின்றனர். மாவட்ட அளவில் சிறந்த குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

> “ஏழ்மையின் இருளில், அறியாமையின் பிடியில் வசித்து வந்தவர்கள், இன்று பொருளாதார வளர்ச்சி பெற்று உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை அடைவதற்கு உதவிட்ட தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு நன்றி தெரிவிக்கின்றனர் மணியம்மை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்.”

கன்னியாகுமரி

ஒளி ஏற்றியது மகளிர் திட்டம்!

கன்னியாகுமரி மாவட்டம், தெரிசனங்கோப்பில் நங்கை மகளிர் சுய உதவிக் குழு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது. அக்குழுவின் உறுப்பினர்கள் குழுவின் பதிவேடுகளை முறையாகப் பராமரித்து வருவதுடன், குழுவின் சார்பில் நடத்தப்பட்டு வரும் நியாயவிலைக் கடையின் பதிவேடுகளையும் சிறப்பாக பராமரித்து வருகின்றனர். இக்குழுவின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் மூலம் ஊக்குநர் பிரதிநிதிக்கான பயிற்சி, குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி போன்றவையும், தையல் மற்றும் எம்பிராய்டரிங் பயிற்சியும், நிதி மேலாண்மை பயிற்சியும் வழங்கப்பட்டது. சுழல் நிதியாக பெற்ற ரூபாய் 25 ஆயிரத்தை குழுவின் உறுப்பினர்களுக்கு சுழற்சி முறையில் உள்கடனாகக் கொடுத்துள்ளனர்.

இக்குழுவினர் சிறு தொழில் செய்வதற்காக ரூபாய் 1,96,000/– மானியக் கடன் கிடைத்தது. அத்தொகையைக் கொண்டு தெள்ளந்தி மற்றும் தெரிசனங்கோப்பு ஆகிய இடங்களில் நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றனர். இக்குழுவின் செயல்பாடுகளின் காரணமாக நேரடிக் கடனாக ரூபாய் 4 இலட்சம் வழங்கப்பட்டது. கடனையும் திரும்பச் செலுத்தி வருகின்றனர். வீட்டிற்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலைகவிந்தார்’ என்ற பாரதி யின் வார்த்தைக்கேற்ப, வீட்டிற்குள்ளே அடைபட்டிருந்த மகளிரின் வாழ்க்கையில் ஒளி ஏற்றியது மகளிர் திட்டம் என்று மகிழ்வுடன் கூறுகின்றனர் நங்கை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்.

சுய உதவிக் குழுக்கள் தொடர் (சென்ற இதழ் தொடர்ச்சி)

வெற்றியை நோக்கி

ஒரு பயணம்...!

திட்டமிடுதல் என்பது அனைத்துப் பணிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறப்பான முறையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் பணிகள் பெரும்பாலும் வெற்றியடையும் என்பதே உறுதியாகும். ஏனெனில் ஒரு செயலைத் திட்டமிட்டுச் செய்யும்போது அதில் உள்ள குறைகள் களையப்பட்டு, வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

வணக்கம். இப்பகுதியில் ஒரு தொழில் முனைவோர் திட்ட அறிக்கையை தயார் செய்யும் வழிமுறைகளைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

தொழில் முனைவோர் முந்தைய பகுதியில் கூறியுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி பின்வருமாறு திட்ட அறிக்கையை தயார் செய்ய வேண்டும்.

1. முதலீடுகள்
2. வருமானம்
3. செலவுகள்
4. எதிர்பார்க்கும் இலாபம்

1. முதலீடுகள்

தொழில் முனைவோர் தொழில் தொடங்குவதற்கு தேவைப்படும் அனைத்து முதலீடுகளையும் இங்கே குறிப்பிட வேண்டும். அதில் சொத்துக்கள், கட்டிடம் முன்பணம், ஆரம்ப கட்ட மாறா செலவுகள் மற்றும் இதர சொத்துக்கள் ஆகியவற்றை குறிப்பிட வேண்டும். தொழிலுக்கு கொள்முதல் செய்யும் சொத்துக்களின் சரியான

விலையை இங்கே குறிப்பிட வேண்டும். எனவே தொழில் முனைவோர் முதலீடுகள் பகுதியில் தேவையானவற்றை மட்டும் குறிப்பிட வேண்டும். தொழிலுக்கு தேவைப்படும் நடைமுறை மூலதனமும் இதில் அடங்கும்.

2. வருமானம்

தொழில் முனைவோர் தொழிலில் ஒரு மாதத்திற்கு எதிர்பார்க்கும் வருமானத்தை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். இதில் வியாபாரத்தில் வரப் போகும் அனைத்து விதமான ஆதாயங்களையும் குறிப்பிடப்பட வேண்டும்.

> தொழிலுக்குப் புதிய நபராக இருந்தால், இதே தொழிலைத் துவங்கி நடத்துபவர்களை நேரில் சந்தித்து அத்தொழிலைப் பற்றி முழுமையான விபரங்களைச் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

3. செலவுகள்

தொழில் முனைவோர் தொழிலில் ஒரு மாதத்திற்கு எதிர்பார்க்கும் செலவுகளை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இதில் மாறும் செலவுகள், மாறா செலவுகள் ஆகியவை அடங்கும். மாறும் செலவுகள் என்பது ஒவ்வொரு மாதமும் ஏற்ற இறக்கங்களை கொண்டிருக்கும். மாறா செலவுகள் என்பது எப்பொழுதும் மாறாமல் இருக்கும். ஒரு பொருளை உற்பத்தி செய்ய பொருட்களை கொள்முதல் செய்வதிலிருந்து சந்தைக்கு கொண்டு சென்று விற்பனை செய்யும் வரை ஏற்படும் அனைத்து செலவுகளையும் சரியாக குறிப்பிடப்பட வேண்டும்.

4. எதிர்பார்க்கும் இலாபம்

தொழில் முனைவோர் எதிர்பார்க்கும் மாத வருமானத்தின் மொத்தத்தில் இருந்து மாத செலவுகளின் மொத்தத்தை கழித்தால் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும். இவ்வாறு கணக்கிடப்படும் இலாபம் போதுமானதாக இருக்க வேண்டும். மேற்கூறிய திட்ட நிதி அறிக்கை தயார் செய்யும் போது அதனுடன் பின்வரும் குறிப்புகளை சேர்த்து வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். தெளிவான முறையில் தயார் செய்ய வேண்டும்.

1. வியாபாரத்தை பற்றிய அடிப்படை விபரங்கள்
2. தொழில் முனைவோரின் முழு விபரங்கள்
3. வியாபாரத்தின் குறுகிய கால நீண்ட கால நோக்கங்கள்
4. சந்தைப்படுத்தும் வகைகள், முதன்மை வாடிக்கையாளர் பற்றிய விபரங்கள்
5. சந்தைப்படுத்தும் விபரங்கள்
6. வியாபாரம் குறிப்பிட்ட இடத்தில் துவங்குவதற்கான காரணங்கள்
7. வியாபாரத்தில் வழங்கப்படும் சேவைகளின் நன்மைகள்
8. சந்தையில் நுகர்வோர் பற்றிய விபரங்கள்
9. உற்பத்தி பொருட்களின் விபரங்கள் விலைப்பட்டியல் தேவை
10. உற்பத்தி பொருட்களுக்கு நிர்ணயிக்கப்படும் அரசு மற்றும் தொழில்நுட்ப எல்லைகள்
11. தொழிலுக்கு முதலீடு செய்யும் விபரங்கள்
12. முதலீட்டின் வகைகள்
13. வியாபார மேலாண்மை பற்றிய விபரங்கள்
14. வியாபாரத்திற்கு செயல்படும் பணியாளர்கள் பற்றிய விபரங்கள்
15. பலம் மற்றும் பலவீனம் பற்றிய ஆய்வுகள்

மேற்கூறப்பட்ட விபரங்களை விரிவாக தயாரித்து தெளிவான திட்ட நிதி அறிக்கையுடன் வங்கிக்கு சமர்ப்பித்தால் துவங்கப் போகும் தொழிலுக்கு வங்கிக் கடன் கிடைப்பது உறுதியாகிறது. மேலும் இவ்வாறு தயாரிக்கப்படும் திட்ட அறிக்கை 100 விழுக்காடு உண்மையான விபரங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தொழில் முனைவோர் வியாபாரத்தில் வெற்றிக் கனியை சுவைப்பதோடு வாழ்வில் மிகவும் உயர்ந்த நிலைக்கு வருவது உறுதி.

எனவே சுய உதவிக் குழு சகோதரிகள் தொழில் ஆரம்பிக்க முற்படும்பொழுது மேற்கூறிய குறிப்புகளை நினைவில் கொண்டு தொழிலில் வெற்றியடைய என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு இத்தொடரை நிறைவு செய்கிறேன்.

ப. சஞ்சீவ் குமார்
உதவித் திட்ட அலுவலர்
மகளிர் திட்டம்

இத்தொடர் முற்றம் இதழில் கடந்த இரு வருடங்களாக தொடர்ந்து வெளியிட அனுமதி வழங்கிய மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கும், முற்றம் ஆசிரியர் குழுமத் திற்கும் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் என்னுடைய பணிவு கலந்த நன்றிகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி

சிறப்பான செயல்பாட்டிற்கு ஊக்கம்!

மகாத்மா காந்தி மகளிர் சுய உதவிக் குழு – தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஒன்றியம், பிளியனூர் ஊராட்சி, பிக்கம்பட்டி கிராமத்தில் செயல்பட்டு வருகிறது. இக்குழுவினர் மகளிர் திட்டம் மற்றும் ஸ்பீடு தொண்டு நிறுவனத்தின் மூலம் ஊக்குனர் மற்றும் பிரதிநிதி பயிற்சி, உறுப்பினர் பயிற்சி, தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி, நாப்கின் தயாரிப்பு பயிற்சி, கம்ப்யூட்டர் பயிற்சி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.

பி.அக்ரஹாரம் பல்லவன் கிராம வங்கி மூலம் நேரடிக் கடன், சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடனுதவியாக ரூபாய் 14,50,000/– பெற்றும், உறுப்பினர்களின் சேமிப்புத் தொகையிலிருந்து உள்கடன் எடுத்தும், பட்டு வளர்ப்பு, புளி மண்டி, கறவை மாடுகள் வளர்த்தல் போன்ற தொழில்களை செய்து ரூபாய் 4000/– வரை மாத வருமானமாகப் பெற்று வருகின்றனர்.

பெற்றோரால் வளர்க்க முடியாத பெண் சிசுவை தொட்டில் குழந்தை மையத்தில் சேர்த்துள்ளனர். ஆதரவற்ற சிறுவர் இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு ரூபாய் 6000/– மதிப்பில் இலவச சீருடை மற்றும் மதிய உணவு வழங்கி மகிழ்ந்துள்ளனர். எழுத படிக்கத் தெரியாத உறுப்பினருக்கு எழுத படிக்கக் கற்றுத் தந்துள்ளனர். துவக்கப் பள்ளியில் மாணவர் சேர்க்கைக்கு உதவி புரிவதுடன், மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கியுள்ளனர்.

> “தீ விபத்தில் வீட்டை இழந்த உறுப்பினருக்கு வீடு கட்ட ரூபாய் 15,000/–மும், கைம்பெண் உறுப்பினருக்கு கறவை மாடு வாங்க ரூபாய் 10,000/–மும் நிதி உதவி வழங்கியுள்ளனர். இக்குழுவின் சிறப்பான செயல்பாட்டிற்கு ஊக்கமளிக்கும் விதமாக பல்வேறு தரப்பினரும் பாராட்டி சான்றிதழ்கள் வழங்கி உள்ளனர்.”

வேலூர்

பனைஓலையில் கலைநயம் மிக்கப் பொருட்கள்

வேலூர் மாவட்டம், அல்லிவரம் கிராமத்தில் மகிழம்பூ மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவினர் சிறப்பான செயல்பாட்டிற்காக அடிப்படை பயிற்சிகளும், தொழில் மேற்கொள்ள ஏதுவாக பனைஓலைப் பொருட்களில் கூடை மற்றும் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் பயிற்சிகளையும் மகளிர் திட்டத்தின் மூலமாகப் பெற்று தற்போது பனை ஓலைப் பொருட்களில் அழகியப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்குழுவினர் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை பல்வேறு இடங்களில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து விற்பனை செய்து வருவதுடன், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகின்றனர். பனை ஓலைப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயில் வங்கிக் கடனை திரும்பிச் செலுத்துவதுடன், குழுவின் உறுப்பினர்களுக்கும் மாதந்தோறும் கணிச மான ஊதியம் பெற்று வருகின்றனர். சிறப்பாக செயல்பட்டு வரும் மகிழம்பூ மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கணியம்பாடி வட்டாரத்தில் செயல்படும் சிறப்பான குழு என மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

விழுப்புரம்

வாழ்க்கை ஒரு பூந்தோட்டம்!

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டாரம், டி. பரனாகினி கிராமத்தில் வசிக்கும் பெருவாரியானவர்கள் நிலமற்ற ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள். விவசாயப் பணி நடை பெறாத காலங்களில் இவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காத நிலையில் மிகவும் வறுமையான நிலையில் வாழ்ந்து வந்தார்கள். இந்நிலையில் இக்கிராமத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் பெண்கள் ஒன்றிணைந்து குங்குமம் மகளிர் சுய உதவிக் குழுவினைத் துவங்கினர்.

நிர்வாகப் பயிற்சிகளும், திறன் வளர்ப்புப் பயிற்சிகளும் மகளிர் திட்டத்தின் வாயிலாக இக்குழுவினருக்கு வழங்கப்பட்டது. தர மதிப்பீட்டிற்குப் பின்னர் மானியத்துடன் கூடிய சுழல் நிதியும் இக்குழு பெற்றது. குழுவின் உறுப்பினர்கள் சுய தொழில் நடவடிக்கையாக விவசாயத்தில் ஈடுபடலாம் என குழுக் கூட்டத்தில் தீர்மானித்தனர்.

உப்பு வேலூர் கிளை, இந்தியன் வங்கி வழங்கிய பொருளாதாரக் கடன் தொகை 4,75,000/– ரூபாயினைக் கொண்டு விவசாய நிலத்தைக் குத்தகைக்கு பெற்று, அதில் கனகாம்பர பூந்தோட்டம் அமைத்து குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் அந்த தோட்டத்தில் விவசாயப் பணிகளில் ஈடுபடத் துவங்கினர். குழு உறுப்பினர்களின் அயராத உழைப்பினால் நாளொன்றுக்கு 10 முதல் 15 கிலோ வரையிலான கனகாம்பரப் பூக்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பூக்களை திண்டிவனம் பகுதியில் உள்ள கடைகளுக்கு சந்தை நிலவரத்திற்கு ஏற்ப விலை நிர்ணயித்து விற்பனை செய்கின்றனர்.

மேலும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர் வீட்டு நிகழ்ச்சிகளுக்கும், உள்ளூர் நிகழ்ச்சிகளுக்கும் தேவையான பூக்களை விற்பனை செய்கின்றனர். கிடைக்கும் வருவாயில் வங்கிக் கடன் தவணைத் தொகையினை திரும்பச் செலுத்தியது போக உறுப்பினர்களுக்கு ரூபாய் 5000/– வரை மாதந்தோறும் கிடைக்கிறது. மகளிர் திட்டத்தின் சிறப்பான வழிகாட்டுதலினால் இன்று கிராமத்துப் பெண்களும் பொருளாதார வளர்ச்சி பெற்று முன்னேறி வருகின்றனர் என்பதை குங்குமம் மகளிர் சுய உதவிக் குழுவின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

திருநெல்வேலி

எதிர்காலம் இனிமையானது!

ஸ்கேடு அன்னை மகளிர் சுய உதவிக் குழு கடந்த 2004ஆம் ஆண்டு முதல் திருநெல்வேலி நகரில் உள்ள மாடத் தெருவில் செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் அனைவரும் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களாவர்.

இவர்களுக்கு மகளிர் திட்டம் மூலம் அடிப்படை பயிற்சிகளும், நிர்வாகப் பயிற்சிகளும் வழங்கப் பட்டது. குழுவின் உறுப்பினர்கள் தங்கள் சேமிப்பின் மூலம் கிடைத்தத் தொகையினை உள்கடனாகப் பெற்று தங்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு பயன்படுத்திக் கொண்டனர்.

தற்போது இக்குழுவின் உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து ரூ. 10000/– முதல் போட்டு முறுக்கு, அச்சு முறுக்கு, அதிரசம், மிக்சர், காரச்சேவு, சீடை மற்றும் இனிப்பு வகைத் தின்பண்டகளை உற்பத்தி செய்து பல்வேறு இடங்களிற்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்பனை செய்து வருகின்றனர். இதன் மூலம் நாளொன்றிற்கு ரூ. 2,000/– வரை இலாபம் பெற்று வருகின்றனர்.

வீடுகளில் எவ்வித வருவாயும் இல்லாது இருந்த பெண்கள் சுய உதவிக் குழுவினைத் தொடங்கி சுய தொழிலினை மேற்கொண்டு, அதன் மூலம் தங்களது குடும்ப பொருளாதார முன்னேற்றத்தையும், குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்காலத்தையும் தீர்மானிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு செயல்பட்டு வருகின்றனர்.

நோய் தீர்க்கும்

பழங்கள்

நாம் உண்ணும் உணவுகளில் பழங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. உடலுக்கு ஊட்டமும், ஆற்றலும் பழங்கள் தருகின்றன. இயற்கையாகவே அனைவரையும் கவரும் வகையில் கண்ணிற்கினிய நிறமும், நாசிக்கினிய மணமும், நாவிற்கினிய சுவையும் கொண்டவையாக பழங்கள் திகழ்கின்றன. காய்கள் பழுத்து கனியாகும் போது அவைகளில் உள்ள மாவுச் சத்தானது எளிதில் செரிமானமாகக் கூடிய சர்க்கரைச் சத்தாக மாறி உடலுக்கு வேண்டிய ஆற்றலில் ஒரு பகுதியைக் கொடுக்கிறது. புரதச் சத்தும், கொழுப்புச் சத்தும் பழங்களில் மிகக் குறைவாகவும், பெரும் பகுதி நீராகவும் உள்ளதால் பருமனான உடல் இளைக்க ஏற்ற உணவாக பழங்கள் உள்ளன.

சுவை மிகுந்த பழங்களில் நார்ச்சத்து மிகுதியாக உள்ளதால் விரைவில் செரிமாணம் ஆகிவிடும். நம் உடலுக்குத் தேவையான சத்துப் பொருட்கள் பழங்களில் மிகுதியாக உள்ளன. எனவே அன்றாட நாம் உண்ணும் உணவுடன் ஏதேனும் ஒரு பழத்தையும் சேர்த்து சாப்பிடுவது மிகவும் நல்லது.

மஞ்சள் நிறத்தைக் கொண்ட மாம்பழம், பப்பாளி போன்றவைகளில் உள்ள உயிர்ச்சத்து, உடல் ஆரோக்கியம், நரம்பு வளர்ச்சி, நல்ல கண் பார்வை, பளபளப்பான தோல் போன்றவை கிடைக்க உதவியாக உள்ளது. வாழைப்பழம், சீத்தாப்பழம் போன்ற பழங்களில் உள்ள உயிர்ச் சத்து பற்கள், ஈறுகள் நன்கு உறுதியாக இருக்கவும், ஈறுகளில் இருந்து இரத்தம் வராமலிருக்கவும் பயன்படுகிறது. நார்ச்சத்துகள் நிறைந்துள்ள பழங்களை உண்பதால் மலச்சிக்கல், செரிமானக் குறைபாடுகள் நீங்கு கின்றன. பழங்களில் உள்ள பழப்பசைச் சத்து ஜாம், ஜெல்லி போன்றவை தயாரிக்கப் பயன்படுகிறது.

> ஒருவரது தினசரி உணவில் ஒரு பகுதி பழங்களாக இருந்தால் அதன் மூலம் இயற்கையாக எல்லாச் சத்துக்களையும் எளிதில் பெற்றிடலாம். பழங்கள் பல்வேறு நோய்களையும் குணப்படுத்தும் வல்லமை கொண்டவையாக உள்ளன.

பழங்கள் சாப்பிடுவதால் குணமடையும் நோய்கள்

எலுமிச்சம்பழம் - தலைவலி, ஆஸ்துமா, பல்நோய், கரப்பான், ஊளைச்சதை, மார்புச்சளி, கருப்பையில் இரத்தக் கசிவு, சீழ் வடிதல், சொறி, குடற்புண், மேகநோய், பித்தம், பசியின்மை, மயக்கம், தொண்டைப்புண், நுரையீரல் நோய் மற்றும் முடக்குவாதம், மாதுளை - மார்புச் சளி, தொண்டைப்புண், செரிமானக் குறைபாடுகள், சீதபேதி, காய்ச்சல், பப்பாளி - செரிமானக் குறைவு, குடற்புண், மலச்சிக்கல் மற்றும் சிறுநீரக நோய்கள், நெல்லி - மயக்கம், ஜன்னி, பல்நோய், சொறி, குடற்புண் மற்றும் மலச்சிக்கல், திராட்சை - பித்தம், வாயுக் கோளாறு, குடற்புண், செரிமானக் குறைபாடுகள், சிறுநீரகக் கோளாறுகள், ஆரஞ்சு - கரப்பான், ஊளைச்சதை, மயக்கம், நாவல் பழம் - சீதபேதி, மாம்பழம் - பசியின்மை, தர்ப்பூசணி - சிறுநீரகக் கோளாறுகள், வாழைப்பழம் - காய்ச்சல் மற்றும் மலச்சிக்கல், ஆப்பிள் - காய்ச்சல், சீதபேதி, தொண்டைப்புண் மற்றும் மலச்சிக்கல், முலாம்பழம் - மலச்சிக்கல் மற்றும் இசிவு நோய், பேரிச்சம்பழம் - மலச்சிக்கல் மற்றும் இரத்த சோகை, அன்னாசி - குடற்புண் மற்றும் மலச்சிக்கல், கொய்யாப்பழம் - மலச்சிக்கல், இரத்த சோகை, சளி, அத்திப்பழம் - மேக நோய், கீல் வாதம், சிறுநீரகக் கோளாறுகள், வில்வப் பழம் - திமிர் வாதம், காலரா, சர்ப்ப விஷம், வயிற்று உப்புசம், வெள்ளரிப் பழம் - குடற்புண், மலச்சிக்கல், வயிற்று உப்புசம்

எனவே அன்றாடம் நாம் உண்ணும் உணவில் பல்வேறு பழங்களை சேர்த்து சாப்பிட்டு, நோய்களின் தாக்குதலில் இருந்து நம்மைக் காத்துக் கொண்டு நலமான வாழ்வை வாழ வாழ்த்துக்கள்.

கோடை வெப்பத்தின் தாக்குதலை தவிர்க்க...

கோடை காலம் தவிர்க்க முடியாதது. ஆனால் கோடை வெப்பத்தை நம்மால் தவிர்க்க இயலும், நாம் கையாலும் இயற்கை வழிமுறைகள் நம் உடலையும் கோடை வெப்பத்தில் இருந்து பாதுகாக்க உதவும் கோடை வந்துவிட்டாலே உடம்பில் அயற்சியும், ஆயாசமும் கூடவே தண்ணீர் தாகம் ஏற்படுவது இயற்கை. கோடைக்காலத்தில் உடம்பில் உள்ள நீர்ச்சத்து அதிகம் வெளியேறுவதால் நமக்கு தாகமும் வறட்சியும் ஏற்படுகிறது, இதுபோன்ற நேரங்களில் இளநீர், மோர், எலுமிச்சைச்சாறு, தர்ப்பூசணி சாறு போன்றவற்றை அருந்துவது மிகவும் நல்லது. இளநீர், மோர் சாப்பிட்டால் சிலருக்கு ஜலதோஷம் பிடிக்கும்.

அவ்வாறு இருப்பவர்கள் அவற்றுடன் சிறிது மிளகுத் தூளை சேர்த்துக் கொள்ளலாம். எலுமிச்சைச் சாறுடன் சர்க்கரைக்குப் பதிலாக தேன் சேர்த்துக் கொள்ளலாம். நாம் அருந்தும் குளிர்பானங்கள், காபி, டீ போன்றவற்றில் சர்க்கரைக்குப் பதிலாக பனைவெல்லம் சேர்த்துக் கொள்வது நன்மை தரும்.

கோடையில் மஞ்சள் காமாலை நோய் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். மோருடன் கீழாநெல்லியைக் கலந்து காலை வேளையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவது மிகவும் நல்லது. ஆலைகள் மற்றும் கனரக வாகனங்களில் பணிபுரிபவர்களுக்கு உடல் அதிகம் உஷ்ணம் அடைந்து அநேகப் பிரச்சனைகள் ஏற்படும்.

இதற்கு சீரகம், வெந்தயம் இரண்டையும் சேர்த்து பொடி செய்து வைத்துக் கொண்டு மோர் கலந்து சாப்பிட்டால் உடல் குளிர்ச்சியடையும். தோல் நோய்கள், அரிப்பு, நமைச்சல், படை, சொறி, சிரங்கு போன்றவை அதிகம் ஏற்படும். குளிக்கும் போது கடலை மாவு, பயத்தம் மாவு மற்றும் சந்தனம், வெட்டிவேர் ஆகியவற்றைக் கலந்து பொடித்து உடல் முழுவதும் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

மோர் அல்லது இளநீரில் வெந்தயத்தை ஊற வைத்து குடிப்பதும் உடல் சூட்டைத் தணிக்கும். ■

வளர்க வணிகம்

■ **மரச்சிற்பங்கள்**

சிற்பி ஆண்கள் சுய உதவிக் குழு,
பெரம்பலூர் மாவட்டம்.
செல்பேசி: 94435 91523
விலை: ரூ. 250/- முதல்

■ **மண் பொம்மைகள்**

அறிவொளி துளசி மகளிர்
சுய உதவிக் குழு,
தூத்துக்குடி மாவட்டம்.
செல்பேசி: 94420 53646

■ **அலங்கார பொம்மைகள்**

தென்றல் சுய உதவிக் குழு,
கோவை மாவட்டம்.
செல்பேசி: 98422 75817

■ **பனைஓலைப்பொருட்கள்**

மல்லிகை அரசு மகளிர் மன்றம்,
திருவள்ளூர் மாவட்டம்.
செல்பேசி:97867 33184

■ **களிமண் பொருட்கள்**

நவசப்த கன்னி சுய உதவிக் குழு,
மதுரைமாவட்டம்.
செல்பேசி: 93624 16104

■ **சணல் பைகள்**

ஸ்ரீ துர்க்கையம்மன் மகளிர்
சுய உதவிக் குழு,
ஈரோடு மாவட்டம்.
செல்பேசி: 93447 82493

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் சாதனை

எங்களது பாலூத்து பஞ்சாயத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வருவதற்கு முன்னால் அனைத்து மக்களும் ஒற்றுமையில்லாமல் தனிப்பட்டு கிடந்தோம். இப்போது நமது வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலமாக எங்கள் அனைவரையும் குழுவாக இணைத்து தேவையான பயிற்சிகளைக் கொடுத்து, நமது பஞ்சாயத்திற்கு செய்ய வேண்டிய சமூகப் பணிகளை எடுத்துக் கூறினார்கள். அதன் விளைவாக எங்களது பாலூத்து பஞ்சாயத்து அளவில் உள்ள 19 குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் இணைந்து ஒரு முடிவு எடுத்தோம். அதன் அடிப்படையில் எங்கள் ஊரினுடைய நுழைவு வாயிலில் எந்த ஒரு நிழலும் இல்லாமல் இருந்தது. அதைக் கருத்தில் கொண்டு அந்த இடத்தில் 19 குழுக்களும் தலா ஒரு மரக்கன்று வீதம் 19 மரக் கன்றுகள் நட்டு அந்தக் கன்றுகளை அந்தந்த குழுவே தண்ணீர் விட்டு பாதுகாக்க முடிவு செய்தோம். அந்தக் கன்றுகள் இதுவரையில் பாதுகாப்பாக வளர்ந்த வருகின்றன. அன்று எங்களது பணியினை பார்த்து கேலியும் கிண்டலும் செய்த எங்கள் பகுதி மக்கள் இன்று மரக் கன்றுகளின் வளர்ச்சியைக் கண்டு வியப்புடன் பெருமையாகப் பேசுகிறார்கள். ■

> இந்த அளவு நாங்கள் ஒற்றுமையுடன் வளர்ச்சியாக இருப்பதற்கு நமது வாழ்ந்து காட்டுவோம் திட்டமும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கமுமே காரணமாக இருக்கிறது என்று நினைக்கும் போது எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியாக இருக்கிறது.

நலிவுற்றவர்களுக்கு பல்வேறு உதவிகள்

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றித்தில் சண்முகசுந்தரபுரம் பஞ்சாயத்து உள்ளது. இந்த பஞ்சாயத்தில் உள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கு பல்வேறு உதவிகள் மற்றும் அரசு உதவிகளைப் பெற்றுத் தந்துள்ளது. இதில் ஒரு பகுதியாக 14 நலிவுற்றோர்கள் (முதியோர்கள்) ஆதரவு இல்லாமல் இருந்தனர். இவர்களுக்காக கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் உறுப்பினர்கள், கணக்காளர்கள் மற்றும் CDFஆகியோரின் விடாமுயற்சியின் காரணமாக மலேசியாவைச் சேர்ந்த உயர்திரு. கிருபாமூர்த்தி என்பவரின் பண உதவியுடன் சண்முகபுரத்தில் CDF அவர்களின் இல்லத்தில் மதிய உணவு அளித்து வருகிறார்கள். ஜனவரி 15 பொங்கல் திருநாளன்று அனைத்து முதியோர்களுக்கும் புத்தாடை வழங்கி மதிய உணவு திட்டத்தை தொடங்கி வைத்துள்ளனர். தற்போது முதியோர்களுக்காக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இதனால் முதியோர்கள் மகிழ்ச்சியில் திளைத்து வருகிறார்கள். ■

வாழ்வில் மகிழ்ச்சி நிறைந்தது

தேனி மாவட்டம், வருசநாடு ஊராட்சியில் உள்ள அம்பேத்கார் நகரில் செல்லத்தாய் ஆகிய நான் கடந்த 20 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். எனது கணவர் திரு. சீனிவாசகம் இறந்து விட்டார். எனக்கு ஒரு மகள் இருந்தார். அவருக்கும் திருமணம் செய்து வைத்து விட்டேன்.

எனது கணவரின் மரணத்திற்குப் பின்னர் நான் ஆதரவு ஏதும் இல்லாமல் மிகவும் வறுமை யான சூழ்நிலையில் வாழ்ந்து வந்தேன். இந்த நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எங்கள் ஊராட்சியில் துவக்கப்பட்டது.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் அம்பேத்கார் நகரில் காந்திஜி மாற்றுத்திறனாளிகள் குழு அமைக்கப்பட்டது. நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த நானும் இக்குழுவில் உறுப்பினராகச் சேர்ந்தேன். எனது ஏழ்மையின் காரணமாக கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் எனக்கு தனிநபர் கடனாக ஜவுளி வியாபாரம் செய்ய ரூ. 4000/– பெற்றேன். தற்போது நான் எனது தொழிலை சிறப்பாக செய்து வருகிறேன். ■

திருமதி. செல்லத்தாய், வருசநாடு, தேனி மாவட்டம்

> எனக்கு இப்போது மாதம் ரூ. 2000/– வரை வருமானம் கிடைக்கிறது. நான் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறேன். எனது ஏழ்மையை நீக்கிய கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்வில் முன்னேற்றம்

ஜீவானந்தம், த/பெ. ஆண்டவர் ஆகிய நான், தேனி மாவட்டம், எஸ். வாடிப்பட்டியில் வசித்து வருகிறேன். 9ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். கூலி வேலைக்குச் சென்று தினசரி ரூ. 80/– வரை கூலி பெற்று வந்தேன்.

இந்தத் தொகை எங்களின் குடும்பத்திற்குப் போதுமானதாக இல்லை. மேலும் வேலையும் நிரந்தரமாக கிடைப்பது இல்லை. இதனால் எங்கள் குடும்பம் மிகவும் வறுமையில் வாடி வந்தது.

இந்த நிலையில் எங்கள் பகுதியில் செயல்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து வேலைவாய்ப்பும், வங்கிக் கடனும் பெற்றுத் தருவதை அறிந்து கொண்டேன். நானும் இளைஞர் குழுவில் இணைந்து தொழிற்பயிற்சியாக ஆட்டோ ஓட்டும் பயிற்சியை 3 மாதங்கள் பெற்று, ஓட்டுநர் உரிமம் பெற்றேன். தற்போது ஆட்டோ ஓட்டுநராக நிரந்தரமாகப் பணி புரிந்து வருகிறேன். இதன் மூலம் எனக்கு மாத ஊதியமாக ரூ. 3500/– கிடைக்கிறது.

வாழ்வில் நல்ல நிலையில் முன்னேற்றம் அடைந்துள்ளேன். இந்த முன்னேற்றத்திற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எங்கள் பகுதிக்கு வந்த செயல்பட்டதே முழுக்காரணம் என்று மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறேன் ■

– திரு. ஆ. ஜீவானந்தம், வாடிப்பட்டி, தேனி மாவட்டம்

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு நன்றி நன்றி

எனது பெயர் அம்பிகா. நான் தேனி மாவட்டம், ஒத்தவீடு கிராமத்தில் வசித்து வருகின்றேன். எனது கணவர் விபத்தின் காரணமாக திடீரென்று இறந்து விட்டார்.

எனக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. வறுமையான சூழ்நிலையில் குடும்பத்தை நடத்த மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தேன்.

எந்த வேலையும் செய்யத் தெரியாததால் வெளியில் எங்கும் வேலைக்குச் செல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தேன்.

இந்தச் சூழ்நிலையில்தான் கோடாங்கிப்பட்டி பஞ்சாயத்தில் சிறப்பாக இயங்கி வரும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராகச் சேர்ந்தேன். அதன் மூலம் குறைந்த வட்டியில் ரூ. 5000/– கடன் பெற்று சிறு பெட்டிக் கடை வைத்து நடத்தி வருகின்றேன்.

இப்பொழுது நான் தன்னம்பிக்கையுடனும், வருமானத்துடனும் வளமாக வாழ்ந்து வருகின்றேன். எனது மகள் சிறப்பாகப் படிக்கின்றாள்.

எனது வாழ்க்கையை வசந்தமாக்கிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு நன்றி நன்றி '■

– திருமதி. அம்பிகா, ஒத்தவீடு கிராமம், தேனி மாவட்டம்

நிரந்தர வேலை கிடைத்தது

தேனி மாவட்டம், கோடாங்கிப்பட்டி பஞ்சாயத்து, சடையால்பட்டியில் வசித்து வருபவர் பாலசண்முகம். இவரது மகன் மணிமாறன் 10ஆம் வகுப்பு படித்து முடித்து விட்டு மேற் கொண்டு படிக்க வசதியில்லாததால் கூலி வேலைக்கு சென்று தினம் ரூ. 80/– கூலி பெற்று வந்தார். மிகவும் வறுமையான சூழலில் வசித்து வந்தது இவரின் குடும்பம். இந்த நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் இளைஞர் குழுவில் உறுப்பினராக மணிமாறன் சேர்க்கப்பட்டார். இளைஞர் தொழிற்திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு மணிமாறனுக்கு கார் ஓட்டுநர் பயிற்சி வழங்கப்பட்டு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ஓட்டுநர் உரிமமும் பெற்றுத் தரப்பட்டது. தற்போது மணிமாறன் வாடகை கார் ஓட்டுநராக பணியில் சேர்ந்துள்ளார். இதன் மூலம் மணி மாறனுக்கு மாதம் ரூ. 4000/– ஊதியம் கிடைத்து வருவதுடன் நிரந்தர வேலையும் கிடைத்துள்ளது.

தனது மகன் மணிமாறனுக்கு தொழிற்பயிற்சி அளித்து, நிரந்தர வேலையும் பெற்றுத் தர காரணமாக இருந்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு திரு. பாலசண்முகம் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார்.

மாற்றுத் திறனாளியின் முன்னேற்றம்

தேனி மாவட்டம், குமணன்தொழு பஞ்சாயத்தில் உள்ள 2வது வார்டைச் சேர்ந்த ஜெயராஜ் – பாண்டியம்மாள் தம்பதியரின் மகள் ஜெயப்பிரியா (வயது 19). இவர் பிறவியிலேயே காது கேட்கும் திறனும், வாய் பேசும் திறனும் இழந்தவர். இன்று வரை எந்த ஒலிகளையும் உணர முடியாமல் இருளில் வாடிக்கிடந்தவர். இவரின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காகவே வந்த வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஜெயப்பிரியாவுக்கு காதொலி கருவி வழங்கியது. இக்கருவியின் மூலம் ஜெயப்பிரியா தனது பெற்றோரின் அன்புக் குரலையும், பரந்து விரிந்த இவ்வுலகில் எழும் அனைத்து ஒலிகளையும் கேட்டு மகிழ்கிறார். இயற்கையை இப்போது இரசிக்க முடிகிறது என்றும், இது தனக்கு மிகுந்த ஆனந்தத்தைத் தருகிறது என்றும் கூறும் ஜெயப்பிரியா தனக்கு இந்த மகிழ்ச்சியை கொடுத்த வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றிற்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் செல்வி. ஜெயப்பிரியா. ■

வாழ்வின் முன்னேற்றம்...

தேனி மாவட்டம் கோடங்கிப்பட்டி பஞ்சாயத்துக்கு, எஸ்.வாடிப்பட்டியில் வசித்து வரும் திரு. கிருஷ்ணசாமி என்பவரின் மகன் வெங்கடேஷ் குமார். இவர் 9ஆம் வகுப்பு படித்து விட்டு மேலே படிக்க வசதியில்லாததால் கூலி வேலைக்குச் சென்று தினசரி ரூ. 80/– கூலியாகப் பெற்று வந்தார். சில நாட்களில் கூலி வேலையும் கிடைக்காமல் போகும். எனவே வெங்கடேஷ்குமாரின் குடும்பம் வறுமையில் வாழ்ந்து கொண்டிருந்தது. இந்நிலையில் வெங்கடேஷ்குமார் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் இளைஞர் குழுவில் இணைந்தார். இவருக்கு டிராக்டர் ஓட்டுநர் பயிற்சி மூன்று மாத காலம் அளிக்கப்பட்டு ஓட்டுநர் உரிமமும், வங்கிக் கடனும் பெற்றுத் தரப்பட்டது.

தற்போது வெங்கடேஷ்குமார் டிராக்டர் ஓட்டுநராகப் பணி புரிந்து மாதம் ரூ. 4500/– ஊதியம் பெற்று வருகிறார். தனக்கு நிரந்த வேலைவாய்ப்பும், ஊதியமும் பெற்றுத் தந்து, தனது வாழ்வின் முன்னேற்றத்திற்கு உதவிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் வெங்கடேஷ்குமார். ■

> வெங்கடேஷ்குமார் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் இளைஞர் குழுவில் இணைந்தார். இவருக்கு டிராக்டர் ஓட்டுநர் பயிற்சி மூன்று மாத காலம் அளிக்கப்பட்டு ஓட்டுநர் உரிமமும், வங்கிக் கடனும் பெற்றுத் தரப்பட்டது.

ஆட்டோ உரிமையாளர்

எனது பெயர் புண்ணியமூர்த்தி, எனது தந்தை பெயர் சுப்பையா, எனது தாயார் மாற்றுத்திறனாளி. நாங்கள் தேனி மாவட்டம், சடையல்பட்டியில் வசித்து வருகிறேன். நான் 8ஆம் வகுப்பு முடித்து விட்டு தினசரி ரூ. 80/– கிடைக்கும் கூலி வேலைக்குச் சென்று கொண்டிருந்தேன். எங்கள் குடும்பம் மிகவும் சிரமத்திற்கு இடையில் வாழ்ந்து வந்தது. இந்நிலையில் எங்களது பகுதிக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வந்தது.

எனது தாயார் மாற்றுத் திறனாளிகள் குழுவிலும், நான் இளைஞர் குழுவிலும் சேர்ந்தோம். வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் ஆட்டோ ஓட்டுநர் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டேன். பயிற்சி முடிந்த பின்னர் ஓட்டுநர் உரிமம் பெற்றேன். வங்கியில் அளித்த கடனுதவி மூலம் ஆட்டோ ஒன்றை வாங்கி வாடகைக்கு ஆட்டோ ஓட்டி வருகின்றேன். கிடைக்கும் வருவாயில் வங்கிக் கடன் தவணைத் தொகையாக மாதந்தோறும் ரூ. 2000/– செலுத்தியது போக மாதம் ரூ. 4000/– வரை வருமானம் பெற்று வருகிறேன். இன்னும் சிறிது நாளில் வங்கிக் கடனை முழுவதும் திரும்பச் செலுத்தி விட்டு ஆட்டோ உரிமையாளர் என்ற மகிழ்ச்சியுடன் வாழ்வில் முன்னேறுவேன். எனக்கு இந்த மகிழ்ச்சியான வாழ்க்கை கிடைப்பதற்கு காரணம் எங்கள் பகுதிக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வந்து எங்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியதுதான். ■

– திரு. புண்ணியமூர்த்தி, சடையல்பட்டி, தேனி மாவட்டம்.

வெற்றிக்கு வித்தாகும் தன்னம்பிக்கை

எனக்கு மட்டும் ஏன்தான் இப்படி துன்பங்கள் வருகின்றதோ என்று நம்மில் பலர் வருத்தப்படுகின்றோம். பலருக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது என வெளிப்படையாகச் சொல்லி விடுவதும் உண்டு. உலகில் தனக்கு மட்டுமே துன்பங்கள் வருகின்றது என நினைப்பது தவறு.

வாழ்க்கையில் எல்லோரையும் தான் துன்பங்கள் தாக்குகிறது. அப்படி துன்பம் வரும்போது நம்மை பாதுகாப்பது தன்னம்பிக்கை. தனக்கு நேர்ந்த சோதனைகளை தனது தன்னம்பிக்கையால் வென்று சாதனை படைத்தவர்கள் பலர். நீண்ட பட்டியலில் இதோ சிலர் – தனது இரண்டாம் வயதிலேயே குருடும் செவிடுமானார் ஹெலன் கெல்லர். ஆனால் அவர் துவண்டு போய் விடவில்லை. நன்கு படித்து கல்லூரி ஆசிரியரானார். தனது அபார உழைப்பால் புகழ் பெற்ற எழுத்தாளர் ஆனார். உலகப் புகழ் பெற்ற இசைச்சக்கரவர்த்தி பீத்தோவன் தனது இரு காதுகளும் செவிடான நிலையில் முயற்சியினாலும், பயிற்சியினாலும் புகழ் மிக்க இசைக் கோவைகளை உருவாக்கினார்.

போலியோவால் தனது இரண்டு கால்களும் செயலிழந்த நிலையிலும் சக்கர நாற்காலியில் உட்கார்ந்து தனது அரசியல் பணியை தொடங்கி அமெரிக்க ஜனாதிபதியானார் ரூஸ்வெல்ட். விஞ்ஞானி டார்வினுக்கு நரம்புத் தளர்ச்சி, அவரால் சரியாகத் தூங்கக் கூட முடியாது. அவர்தான் பரிமாண வளர்ச்சியைக் கண்டுபிடித்தார். வறுமையின் கோரப்பிடியில் பீங்கான் கடையில் தொழிலாளியாக வாழ்க்கையை தொடங்கிய'வர் வெல்ஸ். ஒருநாள் கால்பந்து ஆடும்போது கால் ஒடிந்தது சில நாளில் கிட்னி மற்றும் சுவாசபையும் பாதிக்கப்பட்டது. ஆனாலும் தன் வேதனையை சாதனையாக்க முயன்றார். எழுதினார் எழுதிக் கொண்டே இருந்தார். உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் ஆனார்.

சுரங்க தொழிலாளியாக இருந்தவர் விளாதிஷ்லாங் தித்தோவ், சுரங்க விபத்தில் இருகை கால்களையும் இழந்தார். ஆனாலும் அவர் சோர்ந்து போய் விடவில்லை. தனது பற்களால் பென்சிலை கவ்விக் கொண்டு நாவல்கள் எழுதினார். அவரது நாவல்கள் பெரும் வெற்றியினைப் பெற்றன.

ஒவ்வொரு மனிதனுக்கும் தன் இரு கைகளை தவிர இன்னொரு கை மறைந்து கிடக்கிறது. அதுதான் தன்னம்பிக்கை. தன்னம்பிக்கையுடன் முயன்றால் நாம் எடுக்கும் எந்த முயற்சியும் வெற்றிதான்.

– க. முருகன் அணித்தலைவர், அபிராமம் களப்பகுதி,
இராமநாதபுரம் மாவட்டம்.

> நமது வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் நமது இலக்கு மக்களான மாற்றுத் திறனாளிகளுக்கு தன்னம்பிக்கை அளிப்போம். அவர்களை சாதனையாளர்களாக மாற்றுவோம்.

தொழில் குழு

இருட்டிலே கிடந்தோம்
வெளிச்சத்தைப் பார்த்தோம்
திட்டத்தைக் கண்டோம்
இலக்கு மக்களாய் வந்தோம்
ஒற்றுமையாய் இணைந்தோம்
தொழில் குழுவாய் அமைத்தோம்
பயிற்சிகள் எடுத்தோம்
தன்னம்பிக்கை வளர்த்தோம்
திறமைகள் பெற்றோம்
தொழிலை அறிந்தோம்
மூலதனம் பெற்றோம்
தொழிலை செய்தோம்
வருமானத்தைப் பெருக்கினோம்
சுய சார்பு அடைந்தோம்

ஏ. காளியம்மாள்,
ஒருங்கிணைப்பாளர் (எஸ்.எம்)
காமன்கோட்டை களப்பகுதி,
இராமநாதபுரம் மாவட்டம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

முதலில் வளர்ச்சி பிறகு பாதுகாத்தல் இது பொதுவான கருத்து. சுற்றுச்சூழல் வளர்ச்சி மற்றும் வறுமையின் இணைப்பினை நன்கு உணர்ந்தவர்கள் இதனை முழுமையாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். வளர்ச்சியானது வளங்கள் முழுமை யாக வற்றும் பொழுது அவ்வளர்ச்சியானது குறைந்த காலமே இருக்கின்றது. வளர்ச்சியானது அடிப்படை வளங்களின் வளர்ச்சியைப் பொறுத் துள்ளது.

வளர்ச்சியானது மாசுகளை அதிகமாக்கும் போது வருவாயை குறைத்து செலவினை அதிகரிக்கிறது. வளர்ச்சிக்கான திட்டங்களை வகுக்கும் பொழுது முதலில் இயற்கையினை வளப்படுத்துதல் வேண்டும். அல்லது நமது திட்டங்களால் குறைந்தது இயற்கையினை மாசு படுத்தாமலும், குறைக்காம லும் பாதுகாக்க வேண்டும். இதற்காக சுற்றுப்புறச்சூழல் மேலாண்மை செயல் வடிவம் வடிவமைக்கப்பட்டு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.

வாழ்ந்துக் காட்டுவோம் திட்டத்திற்கான சுற்றுப்புறச்சூழல் மேலாண்மை செயல் வடிவம்

நோக்கம்

இத்திட்ட வரைவின் நோக்கமானது ஏழை மக்களின் வாழ் வாதாரமும், சுற்றுப்புறச் சூழலும் ஒன்றை ஒன்று பாதிக்காத வகையில் இருப்பதை உறுதி செய்தல் ஆகும். மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் நிலையான பயன்களைப் பெறும் வகையில், இதன் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், அதே சமயத்தில் சுற்றுப்புறச் சூழ்நிலையை பாதுகாத்தல் என்ற அடிப்படையில் ஒன்றுக்கொன்று இணைந்து செயல்படுதல்.

குறிக்கோள்கள்

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் உதவியோடு செயல்படும் சமுதாய அமைப்புகள் மூலமாக துவக்க உத்தேசித்துள்ள தொழில் திட்டங்கள் மற்றும் பிற நடவடிக்கைகளின் காரண மாக தனிப்பட்ட மற்றும் ஒட்டுமொத்த அளவில் சுற்றுப்புறச் சூழலுக்கு எதிராக உருவாகும் தாக்கங்களைக் குறைத்தல்.

சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தும் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

தனிப்பட்ட தொழில் திட்டம் மற்றும் பிற நடவடிக்கைகள் மூல மாக நீண்ட காலத்திற்கு நிலையான பயனளிப்பதை உறுதி செய்வதற்கு அவை பெருமளவில் சார்ந்துள்ள இயற்கை வள ஆதார அமைப்புகளை பாதுகாத்து பயன்படுத்துதல்.

இத்திட்ட வரைவின் முக்கிய அங்கங்கள்

குறிப்பிட்ட குறிக்கோள்களை அடையும் வகைளில் தனிப்பட்ட தொழில் திட்டம் மற்றும் பிற செயல்பாடுகளைத் திட்டமிடுதல், ஒப்புதல் அளித்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய அனைத்து நிலைகளிலும் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகளை இத்திட்ட வரைவு தெளிவுபடுத்தியுள்ளது. மேலும், அவற்றை செயல்படுத்துவதற்கு தேவையான கண்காணிப்பு, அமைப்பு மற்றும் திறன் மேம்பாட்டு விஷயங்களையும் குறிப்பாக வலியுறுத்துகிறது.

இத்திட்ட வரைவில் உள்ள அம்சங்கள்

தொழில் திட்டம் மற்றும் பிற செயல்களுக்கான சுற்றுப்புறச் சூழல் ஆய்வு மாநில சுற்றுப்புறச் சூழல் ஆதார அமைப்பு மற்றும் மாவட்ட திட்ட மேலாண்மை பிரிவு ஆகியவற்றின் மேற்பார்வை பயணம் திட்ட வரையறையை பிறர் மூலம் தணிக்கைசெய்தல்.இத்திட்டவரைவைசெயல்படுத்துவதற்குத் தேவையான அமைப்புகளை உருவாக்குதல்

திட்ட வரைவு பற்றிய பயிற்சி திட்டத்தின் (MIS) தகவல் மேலாண்மை மற்றும் இத்திட்ட வரைவு ஆகியவற்றை ஒருங்கிணைத்தல்

CEE Andhra Pradesh
Centre for Environment Education, Andhra Pradesh Cell
6-2-959, D.B.H.P. Sabha Complex,
Khairathabad, Hyderabad - 500 004.
Phone : 044-23374397 Fax : 040-23312992
Email : ceeandhrapradesh@ceeindi.org ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamil Nadu Corporation for Development of Women Ltd, No: 100 Anna Salai, Guindy, Chennai – 600 032 (50,000 Copies circulated) an Printed by V. RAMESH, CHENNAI MICRO PRINT PRIVATE LTD, New 130 Old no.34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai - 29. Editor: S.CHINNAPPAN.

ஆரோக்கியமான குழந்தை பெற ஆசையா?

நம்பிக்கை மையம் வாருங்கள்!

ஆரோக்கியமான
குழந்தை
நம் பொறுப்பு!

பெற்றோர்-சேய் நலத்திட்டத்தின் மூலம் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுங்கள்.

நம்பிக்கை மையம்

- அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்
- மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைகள்
- ஆரம்ப சுகாதார மையங்கள்

ஆகிய இடங்களில் உள்ளன

Toll Free No. 18004191800

TANSACS

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்,
சென்னை - 600 008.

APAC-VHS

TAI-VHS
Chennai

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 2435/2010
Reg. No. TN/CC(S)Dn./64/09-11 & Licensed to Post Under without Prepayment No. 564 / 09 - 11

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்.
"முற்றம்" படியுங்கள், பாதுகாத்து வையுங்கள், சந்தாதாரர் ஆகுங்கள், முற்றத்தில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

வானவில்லின் வர்ணஜாலம்!
வாங்கி மகிழ இது நல்ல காலம்!!

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

விளம்பரக் கட்டணம் (கலர்)

பின் அட்டை	ரூ. 25,000/-
அட்டை இரண்டாம் பக்கம்	ரூ. 20,000/-
அட்டை மூன்றாம் பக்கம்	ரூ. 20,000/-
உட் பக்கம்	ரூ. 20,000/-
அரைப் பக்கம்	ரூ. 10,000/-
கால் பக்கம்	ரூ. 5,000/-

(விளம்பரக் கட்டணத்தில் குழுக்களுக்கு மட்டும் சிறப்புச் சலுகை)

சந்தாக் கட்டணம்

1 ஆண்டு சந்தா	ரூ. 100/-
2 ஆண்டு சந்தா	ரூ. 150/-
3 ஆண்டு சந்தா	ரூ. 250/-
4 ஆண்டு சந்தா	ரூ. 300/-
ஆயுள் சந்தா	ரூ. 600/-
புரவலர் கட்டணம்	ரூ. 15,000/-

"முற்றம்" மகளிர் மாத இதழ் www.tamilnaduwomen.org/mutram

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை - 600 032

தொலைபேசி - 044 -42085804, 4202 7635
4208 5806, நிகரி - 044 - 22352751
wdcmutram@yahoo.com, wdcmutram@gmail.com